# CHALLENGES AND REMEDIES IN THE EFICIENT USAGE OF QUALITY INPUTS IN SCHOOLS - A STUDY BASED ON THE SCHOOLS IN TELLIPPALAI DIVISION

**Pathmanathan Sasikumar**
PGDE (Full Time) student,

**Ananthamyl Nithlavarnan**,
Lecturer,
Department of Education,
University of Jaffna, SriLanka

## Abstract in English

"Quality inputs for quality education" concept has been considered in teaching – learning in the Srilankan education system. There are many issues pertaining to the efficient use of quality inputs. The objectives of the study are to identify the weakness of efficient use of quality inputs and to propose recommendations to promote efficient ways in this process. Eleven schools in the division of Tellippalai among thirty four schools have been choosen for this study. Stratified random sampling method is used for this purpose. Principals, teachers and students have been choosen randomly for the purpose of this study. Questionnaire, observation shedule, Interview shedule and administrative documents have been used for data collection. Collected data have been organised in the form of tables, graphs and percentages for data analysis. The findings in this study show, that there are many issues and problems in relation to efficient use of quality inputs. The problems identified in this study such as inadequate allocation for quality inputs, irregular destribution, timeframe not adopted, negative attitude of principals and teachers, irregular use of inputs, unplanned and weakness procurement, less transparancy practices in accounting, needful lists not submitted, abuse of finance, work load, neglegence in using inputs, biasness, failier in maintaining documents are identified as factors which are responsible for inefficient use of quality inputs. In future, to ensure the efficient use of quality inputs following actions are required: timely release of quality inputs; changing attitudes of teachers and principals petaining to quality inputs; timely distribution and procurement; transparantcy in quality finance; regular supervision and monitory action; promotion of motivation to use quality inputs at school level adequate allocation of time to ensure quality inputs use in curricular managmant at the school.

**Key words :-** Quality inputs , Efficient use of inputs , Challanges and remedies

### பாடசாலைகளில் வினைத்திறனான தரஉள்ளீட்டுப் பயன்படுத்தலிலுள்ள சவால்களும் பரிகாரங்களும்

- தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு.

## ஆய்வுச் சுருக்கம்


இலங்கைப் பாடசாலைகளில் கற்றல்-கற்பித்தலில், பாடசாலைக் கல்வி முறையின் பண்பு சார் விருத்திக்காக அறிமுகப்படுத்திய திட்டங்களில் தரமான கல்விக்கான தரமான உள்ளீடுகள் (Quality inputs) முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. அனைத்துப் பாடசாலைகளிற்கும் வழங்கப்படும் தரமான உள்ளீடுகளின் வினைத்திறனான பயன்படுத்தல் தொடர்பான எழுவினாக்கள் இன்று பரவலாக காணப்படுகின்றன. பாடசாலைகளில் தர உள்ளீடுகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதில் உள்ள சவால்களை இனங்கண்டு அவை தொடர்பான நலிவான விடயங்களை ஆராய்ந்து வெளிப்படுத்துவதுடன் அவற்றினை மேம்படுத்துவதற்கான விதந்துரைகளை முன்வைப்பதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும்.

இந்த நோக்கத்தை அடைவதற்காக தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள 34 பாடசாலைகளில் 11 பாடசாலைகள் படைகொண்ட எழுமாற்று மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பங்குபற்றுநர்களாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து, அவதானிப்பு, நேர்காணல், ஆவணப் பரிசோதனை மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட தகவல்களை அட்டவணைப்படுத்தி வரைபுகள், மற்றும் சதவீத புள்ளிப் பகுப்பாய்வு முறை என்பன பயன்படுத்தப்பட்டு விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தரமான உள்ளீட்டு நிதி ஒதுக்கீடுகள் போதாமை, சீராகப் பகிர்ந்தளிக்காமை, உரிய காலப்பகுதிக்குள் வழங்காமை, திட்டமிடப்படாத கொள்வனவுகள், அதிபர் மற்றும் ஆசிரியர்களின் எதிர்மறை மனப்பாங்கு, வகுப்புக்களில் தரஉள்ளீடுகள் முறையாகப் பயன்படுத்தப்படாமை, பொருட்கொள்வனவில் குறைபாடு, வெளிப்படைத்தன்மையுடன் கணக்குகள் பேணப்படாமை, தேவைப்பட்டியல் ஒப்படைக்காமை, நிதிமுறைகளில் மோசடி, காலம் பிந்திய விநியோகம், வேலைப்பளு, பாவனையில் ஆர்வமின்மை, பக்கச்சார்பு, ஆவணம் பேணலில் குறைபாடு போன்றன பாடசாலைகளில் தர உள்ளீடுகளின் வினைத்திறனான பயன்படுத்தலுக்குத் தடையாக உள்ளமை இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தர உள்ளீடுகளின் பயன்பாட்டை மேம்படுத்தல் தொடர்பான விதந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.



**முதன்மைச் சொற்கள்** :- தரமான உள்ளீடுகள், வினைத்திறனான பயன்பாடு, சவால்களும் பரிகாரங்களும்.

## 1. அறிமுகம்

பாடசாலைகளில் கற்றல் - கற்பித்தலை இலகுபடுத்தவும் கல்விச் செயற்பாட்டின் பண்புத்தர விருத்தியை மேம்படுத்தவுமென பாடசாலைக்கான நிதி ஒதுக்கீடுகள்'' தர உள்ளீடுகள்'' (Quality inputs) எனும் பெயரில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. அந்தவகையிலே "**பாடசாலைகளில் வினைத்திறனான தர உள்ளீட்டுப் பயன்படுத்தலிலுள்ள சவால்களும் பரிகாரங்களும்**'' என்ற தலைப்பில் தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப்பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது.

## 2. ஆய்வுப் பின்னணி

எப்பொழுது கற்றல் என்பது ஆரம்பமாகியதோ அப்பொழுதே அக்கற்றலுக்கான துணைச்சாதனங்களின் பயன்பாடும் ஆரம்பித்து விட்டது. இலங்கை அரசானது ஆங்கிலேயரின் காலணித்துவ ஆட்சியில் இருந்து விடுபட்டு சுதந்திரத்தைப் பெற்றபின் கல்வியின் பண்புத்தர விருத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. அந்தவகையிலே 'அனைவருக்கும் கல்வி', 'இலவசக்கல்வி', 'கட்டாயக்கல்வி', 'கல்வியில் சமவாய்ப்பு', மற்றும் 'தரமான கல்வி' எனப் பல்வேறுபட்ட குறிக்கோள்களின் அடிப்படையில் இன்றுவரை செயற்பட்டு வருகின்றது. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தபொழுது C.W.W. கன்னங்கரா அவர்கள் இலவசக்கல்வி முறையை அறிமுகம் செய்து வைத்தார். அத்துடன் மிசனெறிகளின் செல்வாக்கின் கட்டுப்பாட்டில் இருந்த பாடசாலைகள் உட்பட அனைத்துப் பாடசாலைகளையும் அரசு பொறுப்பேற்றது தொடக்கம் கல்வித் துறையிலே பல பயனுள்ள மாற்றங்களை உட்புகுத்தினார்.

அந்தவகையிலே மாணவர்களுக்கான இலவசக்கல்வி, இலவச மதிய உணவுத் திட்டம், இலவச சீருடை, இலவசப் பௌதிக வள உதவி, மானியப் போக்குவரத்து, மற்றும் சுகாதார நடவடிக்கை இணைப்பு போன்ற கல்விப்புல மேம்பாட்டு நலன்புரி நடவடிக்கைகள் இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவரிசையிலே, மாணவர்களின் கற்றல் செயன்முறைகளை இலகுபடுத்தும் நோக்கில் பண்புத்தர விருத்திக்காக அறிமுகம் செய்யப்பட்ட நடவடிக்கையே 'தரஉள்ளீடுகள்' ஆகும். பாடசாலையில் வகுப்பறைச் செயன்முறையோடு மட்டும் மட்டுப்படுத்தப்படாது முழுப்பாடசாலையையும் உள்ளடக்கிய பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடிய நிதிவடிவிலான ஒரு செயன்முறையாகவே இது அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிதிப் பயன்பாடு தொடர்பாக காலத்துக்கு காலம் செயலமர்வுகள், சுற்றறிக்கைகள் மூலமான வழிகாட்டல்கள் எனப்பல்வேறுபட்ட முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. எனினும் இன்றுவரையும் இந்நிதியைக் கையாளல், பயன்படுத்தல், பயன்படுத்தும் நோக்கம், கிடைப்பனவு, பயன்பாட்டில் வெளிப்படைத் தன்மை, சரியான ஒதுக்கீடு, வினைத்திறனான பயன்பாடு எனப் பல்வேறு வகைகளிலே பிரச்சினைகள் சமகாலத்தில் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தர உள்ளீட்டினை வினைத்திறனாகப் பயன் படுத்துவதில் காணப்படுகின்ற தடைகளை இனங்கண்டு அவற்றினை இழிவளவாக்கிக் கொள்ளும் நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை முன்வைப்பதனையும் நோக்காகக் கொண்டே இவ்வாய்வு முன்னெடுக்கப் பட்டது.

## 3. ஆய்வுப்பிரச்சினை

மாணவரின் கற்றலை மேம்படுத்தவும், இலகுபடுத்தவும், கற்றலில் விருப்பை ஏற்படுத்தவும், மற்றும் கற்றலை விரைவுபடுத்தவும் உதவுகின்ற வகையிலே தர உள்ளீட்டு நிதிகள் வருடா வருடம் பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினால் ஒதுக்கப்படுகின்றன. பயன்பாட்டுரீதியில் பாடசாலைகளுக்கென ஒதுக்கப்படும் தர உள்ளீட்டு நிதிதொடர்பாக பாடசாலை வகை, பாடங்கள், மற்றும் தரங்கள், ஆகியவற்றுக்கிடையே தர உள்ளீட்டினைப் பயன்படுத்தல் தொடர்பான குறைபாடுகள், சவால்கள் இன்று அதிகளவில் காணப்படுகின்றன. நடைமுறை ரீதியான பல்வேறு சவால்கள் ஆய்வாளர்களால் இனங்காணப்பட்டுள்ளன:

* தரஉள்ளீட்டு நிதி ஒதுக்கீட்டில் பாடசாலைக்கு பாடசாலை பாகுபாடு மற்றும் சமமின்மை, காணப்படுகின்றது.
* பாடசாலைகளில் அனைத்து வகுப்புக்களிற்கும் சீராகப் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை.
* தரஉள்ளீடுகள் ஆரம்ப மற்றும் இடைநிலை வகுப்புக்களிற்கு முழுமையாகக் கிடைப்பதில்லை.
* பாடசாலைகளில் தர உள்ளீட்டு நிதிகள் முழுமையாக பயன்படுத்தப்படுவதில்லை.
* தரஉள்ளீடுகள் தொடர்பான பதிவேடுகள் சீராகப் பேணப்படாமை.
* தரஉள்ளீட்டுப் பாவனை தொடர்பான மேற்பார்வை மற்றும் கண்காணிப்பில் பல குறைபாடுகள் காணப்படுகின்றமை.
* உரிய காலப்பகுதியில் நிதி ஒதுக்கீடின்மையும் தேவையான நேரத்தில் பயன்படுத்தாமையும்.
* ஆசிரியர்களின் எதிரான மனப்பாங்கும் தரஉள்ளீட்டுப் பாவனையில் ஆர்வம் இன்மையும்.
* அழிபொருள் நிதிமூலத்தினை நிலையான பொருளுக்குப் பயன்படுத்தல்.

## 4. ஆய்வுக்கான நியாயப்பாடு

2000 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு தர உள்ளீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. காலத்திற்கு காலம் பல்வேறு சுற்றறிக்கைகள் மூலம் இதனை வினைத்திறனாக நடைமுறைப்படுத்த, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் நிதி ஒதுக்கீடுகள், கொள்வனவுகள், பகிர்ந்தளிப்புக்கள், பயன்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள், ஆவணப் பேணல்கள் என்பனவற்றில் குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் இனங்கண்டு வெளிப்படுத்துவதன் மூலம், தரஉள்ளீட்டுப் பாவனையை எதிர்காலத்தில் மேம்படுத்த முடியும். அத்துடன் மாணவரின் கற்றலிலும், மதிப்பீட்டிலும் உரிய மாற்றங்களை பண்புரீதியாக அடையலாம் என்ற வகையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 5. ஆய்வின் குறிக்கோள்கள்

1. பாடசாலைகளில் தரமான உள்ளீட்டுப் பயன்பாட்டையும் அது தொடர்பான பின்னணியையும் அறிதல்.
2. பாடசாலைகளில் தரமான உள்ளீட்டுப் பயன்பாடு தொடர்பான சவால்களை இனங்காணல்.
3. பாடசாலைகளில் வினைத்திறனான தர உள்ளீட்டுப் பயன்பாட்டுக்கான சிபார்சுகளை முன்வைத்தல்.

## 6. ஆய்வு வினாக்கள்

1. பாடசாலைகளில் தரமான உள்ளீட்டுப் பயன்பாடு தொடர்பான நடைமுறைகள் எவ்வாறுள்ளன?
2. பாடசாலைகளில் தரமான உள்ளீடுகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதில் உள்ள தடைகள் எவை?
3. தரமான உள்ளீடுகளை பாடசாலைகளில் வினைத்திறனாகப் பயன்படுத்த எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்?

## 7. ஆய்வு வரையறை

இவ்வாய்வின் வரையறைகளாக பின்வருவன அமைகின்றன.

1. தரமான உள்ளீடுகள் தொடர்பாக இலங்கை கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நிதி மட்டுமே இவ்வாய்வில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.
2. தெல்லிப்பழைக் கோட்டத்தில் காணப்படுகின்ற 34 பாடசாலைகளில் 11 பாடசாலைகள் மட்டுமே ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

## 8. இலக்கிய மீளாய்வு

எந்த ஒரு ஆய்வும் நிறைவானதாகவும் உண்மையான முடிவுகளை வெளிக்காட்டுவதாகவும் அமைய வேண்டுமெனில் இலக்கிய உசாவல் அவசியம் என 'டாம்' மற்றும் 'டார்னே' ஆகிய ஆய்வாளர்கள் (1971) குறிப்பிடுகின்றனர். அந்தவகையில் தரஉள்ளீடுகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதிலுள்ள சவால்களும் தீர்வுகளும் என்ற தலைப்புக்கு ஏற்ப

1. தரமான உள்ளீடுகள்
2. கற்றல் - கற்பித்தல்களின் தர உள்ளீட்டின் தேவைகள்
3. கற்பித்தல் சாதனம் பற்றிய புரோபல் அவர்களின் கருத்து
4. கற்பித்தல் சாதனம் பற்றிய ரூசோ அவர்களின் கருத்து
5. கற்பித்தல் சாதனங்கள் தொடர்பான கலைத்திட்ட முகாமைத்துவத்தின் கருத்து
6. தர உள்ளீட்டு பிரச்சினைகள் தொடர்பான கல்வியியலாளர்களின் கருத்துக்கள்
7. தரமான கல்வி உள்ளீடுகளும் எண்ணக்கரு விளக்கமும்

ஆகிய வகைகளின் கீழே இலக்கிய உசாவல் தகவல்கள் முன்வைக்கப்படுகின்றன. தர உள்ளீடுகளின் வினைத்திறனான பயன்பாட்டில் உள்ள சவால்களிற்கான தீர்வுகளை முன்னெடுக்கும் போது 'தரமான உள்ளீடுகள்' என்பதனை வரையறை செய்து கொள்வது என்பது பிரதானமானதாகும்.

ஆசிரியரின் கற்பித்தலை வலுப்படுத்தவும் மாணவரின் கற்றல் செயன்முறையினை மேம்படுத்தவும் கல்வி அமைச்சினால் 2000 ஆம் ஆண்டில் இருந்து தரமான கல்வி உள்ளீடுகள் அறிமுகம் செய்யப்பட்டு இன்றுவரை அமுலில் இருந்து வருகின்றது. தரமான கல்வி உள்ளீடுகள் என்பது 'மாணவர்கள் பயிலும் முறைகளிலும் ஆசிரியர்கள் அறிவைப் பகிர்ந்து கொடுக்கும் முறைகளிலும் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்கு பயன்படுத்தப்படும் எல்லாப்பொருட்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் சேவைகள்' என வரையறுக்கப்பட்டுள்ளது. (கல்வி அமைச்சு,2000).

கல்வி அமைச்சும், நிதி ஆணைக்குழுவும் இணைந்த வகையில் பின்வரும் அம்சங்களின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகளின் அளவுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

1. மாணவர் எண்ணிக்கை
2. பாடசாலை வகை
3. விசேட கல்வி அலகு உள்ள பாடசாலைகள்

இந்நிதி ஒதுக்கீடானது 'நியம ஆதார அலகுச் செலவு வள ஒதுக்கீட்டுப் பொறிமுறை– NBUCRAM (NORM BASED UNIT COST RESOURCE ALLOCATION MACHANISM) எனும் அடிப்படையில் பாடசாலைகளுக்கிடையே மேற்கொள்ளப்படுகின்றது.
பத்மாவதி (2010) அவர்கள் குறிப்பிடும்போது பாடப்பொருள் சார்ந்த அறிவினை மட்டும் நோக்காகக் கொண்டு காணப்பட்ட ஆரம்பகால பாடசாலைக் கல்வி நோக்கானது இன்று கற்றல் திறன்களிற்கும் உபாயங்களிற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ் அறிவுக்கையளித்தல் சாதனப் பயன்பாடுகளின் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துகின்றன எனக்குறிப்பிட்டுள்ளார்.
'மாணவர்களின் கல்வித்தரம், அடைவுமட்டம் என்பவற்றை விருத்தி செய்வதற்கான இடம் வகுப்பறையாகும். எனவே வகுப்பறையினை உயிர்த்துடிப்புள்ளதாக இயங்கக்கூடியதான வளங்கள் காணப்பட வேண்டும்'
இதில் இருந்து வகுப்பறை இயங்குநிலையினை உறுதிப்படுத்துவதற்கு தரமான உள்ளீடுகளின் அவசியம் நன்கு உணர்த்தப்படுகின்றது.

“பெரும்பாலும் வறிய கிராமப் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் ஏறத்தாழ 2000 பாடசாலைகளில் மாணவர் மேசைகள், கதிரைகள், கரும்பலகைகள் போன்ற அடிப்படை வசதிகள் போதாமல் உள்ளன. 3500 பாடசாலைகளில் கணனிகள் இல்லை 500 பாடசாலைகளில் மின்சாரம் இல்லை இங்கு தரமான உள்ளீடுகள் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் போன்ற பாடங்களிற்கான கற்பித்தல் சாதனங்கள் பற்றாக்குறையாகவே உள்ளன” ஜெயராசா (2008) அவர்கள் உபகரணப் பயன்பாடு பற்றி குறிப்பிடும் போது, புரோபலின் சிறார் பள்ளியில் “பரிசுகளும் தொழில்களும்” (Gifts and Occupations) என்று பெயரிட்டார். பத்துப் பொருட்களை இவர் பரிசுப் பொருட்களாக உருவாக்கினார். மாணவரால் செயற்பாடு கொண்டு இயக்கத்தக்க சிறிய பொருட்களாக அவை அமைந்தன. ஆறுவிதமான வண்ண நூற்பந்துகள், மரப்பந்துகள், சதுரக்கட்டைகள், செவ்வகவடிவ மரக்கட்டைகள், பல்வேறு வடிவங் கொண்ட சிறிய மேசைகள் முதலியவற்றின் ஊடாக அறிவையும் திறன்களையும் முன்னெடுக்க முடியும் எனக் கூறினார்.

பாடசாலையின் வெளிவாரி மதிப்பீட்டில் 08 பிரதான சுட்டிகளில் 03 ஆவது சுட்டியாக அமைவது முறையான கலைத்திட்ட முகாமை ஆகும். இதில் 10 ஆவது நியதி தர உள்ளீட்டுப் பயன்பாடு ஆகும். இவற்றுள் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- வினைத்திறன் மிக்க கற்றல் செயற்பாட்டிற்கு தர உள்ளீட்டுப் பயன்பாடு தொடர்பாக ஆசிரியரின் கவனத்தை ஈர்த்தல்
- தரமான உள்ளீடுகளை உரிய பிரிவுகளிற்கும் பாடங்களிற்கும் பகிர்ந்தளித்தல்
- பகிர்ந்தளிக்கப்பட்ட தரமான உள்ளீடுகள் தொடர்பாக ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்
- தரமான உள்ளீடுளைப் பெறுவதற்கு முகாமைத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- அனைத்து பிரிவுகளிற்கும் பாடங்களிற்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட நிதியை பாட அபிவிருத்திக்காக பயன்படுத்தல்

கற்றல் செயன்முறையினை (Style) இரு வேறு வகைக்குள்ளே கொண்டு வர முடியும் என ‘கொல்ப்’ என்பவர் குறிப்பிடுகின்றார்.(Kolb, 1976) அவையாவன:

1. தகவல்கள் எவ்வாறு உள்வாங்கப்படுகின்றன என்பவை தொடர்பான புலக்காட்சி கொள்ளல்
2. பெறப்பட்ட தகவல்களை எவ்வாறு உள்வாங்கி நிரலாக்கம் செய்யப்படுகின்றது என்பது தொடர்பான செயன்முறை

மேற்படி இரு செயன்முறைக்கும் தரஉள்ளீட்டு வளங்களின் பிரயோகமே முக்கிய இடம் வகிக்கின்றது. வினைத்திறன் மிக்க பாடசாலைகள் பற்றிய எதிர்பார்ப்புக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. போட்டி மிகுந்த கல்விச்சூழல் தேர்ச்சிமிகு தரமான வெளியீடுகளைத் தர பாடசாலைகள் முயன்று வருகின்றன. பதவி உயர்வு, சம்பள ஏற்றம், இடமாற்றம், பொருத்தமற்ற மேற்பார்வை, பாடசாலை வளங்கள் உரியவாறு ஒதுக்கிக் கொடுக்கப்படாமை காரணமாக ஆசிரியரின் கற்றல் - கற்பித்தல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.
இன்றைய கல்வி விதானத்தில் ஒட்டுமொத்தமாக உச்சரிக்கப்படுவது ‘தரம்’ என்ற எண்ணக்கருவாகும். 21 ஆம் நூற்றாண்டுக்கான கல்வியின் மகுட வாசகமாக ‘தரமேம்பாடு என்ற பதம் கல்வியின் எல்லாச் செயன்முறைகளையும் உள்வாங்கி உள்ளதாக கருதப்படுகின்றது’

இலங்கையில் கிட்டத்தட்ட 10012 பாடசாலைகளும் 41 இலட்சம் மாணவர்களும் கல்வி கற்கின்றார்கள். இவர்களிற்கு கல்வி கற்பிக்க 235,000 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளனர். எனினும் இலங்கை கல்வி முறைமையில் காணப்படும் சமகாலப் பிரச்சினைகளில் 'பாடசாலைகளுக்கு வளங்கள் ஒழுங்காக பகிர்ந்தளிக்கப்படாமையும்' முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

அனந்தராஜ்(2011) அவர்கள் குறிப்பிடும் போது பல வழிகளில் நிதி, பௌதிகவளம் கிடைத்தும் பிரச்சினை நிலவுகின்றது. தாய்மொழிப்பாட சித்தி வீதம் 80% ஆக இருப்பது தாய்மொழிக்கல்வியை கேள்விக் குறியாக்கியுள்ளது. தரஉள்ளீட்டு நிதி மூலம் பெறப்படும் வளங்கள், வகுப்பிற்கான தேர்ச்சி மற்றும் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டு கொள்முதல் செய்யப்படுவதில்லை. தரஉள்ளீட்டுப் பொருட்களும் கல்வி அமைச்சு மற்றும் மாகாணங்களினால் வழங்கப்படும் கற்றல் சாதனங்கள் ஆய்வு கூடப்பொருட்கள், நூலகங்கள் போன்றவற்றை கற்றல் செயற்பாட்டில் பயன்படுத்துவது குறைவாக உள்ளது. வடக்கு கிழக்கில் அடிப்படைக்கல்வி அலகினால் (BESO) மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 20%ஆன ஆசிரியர்களே கற்றல் - கற்பித்தலில் கட்புல, செவிப்புல சாதனங்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.

வேதநாயகம் (2004) அவர்கள் எழுதிய 'தரமான உள்ளீடுகள்' என்ற கட்டுரையில் தரமான உள்ளீடு என்றால் என்ன? அதில் அடங்கும் விடயங்கள், தரஉள்ளீட்டுக்கான நோக்கங்கள், பேணவேண்டிய ஆவணங்கள் தொடர்பான விபரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

சின்னத்தம்பி (2005) அவர்கள் "இடைவிலகல், மீளக்கற்றல் வகையிலான நிதிவிரயம் பற்றாக்குறை வளங்களின் விரயத்தை அதிகரிப்பதுடன் சர்வஜனக் கல்வி இலக்கின் முன்னேற்றத்தையும் மெதுவாகத்தாக்கி பல்வேறு வகையில் தேவைப்படும் மனித வலுவின் நிரம்பலையும் குறைக்கச் செய்து வருகின்றது... கல்வித் துறையிலான வளங்களில் தங்கியுள்ள உள்ளீடுகளின் தராதரம் போன்றவையும் பிரச்சினைக்குள்ளாகின்றன"
இக்கூற்று ஆய்வாளரின் ஆய்வுப்பிரச்சினை தொடர்பான சிந்திப்பை மேற்கொள்ள உதவியாக அமைகின்றது.

"புதிய மாணவர்களிற்கு உந்து விசையாக அமையும் கல்விக் கோட்பாடுகள்' எனும் போது, கல்வித்தர மேம்பாட்டை முன்னெடுத்தல் என்பது முன்பள்ளிகளின் தரத்தை மேம்படுத்தல், அவற்றின் கலைத்திட்டத்தை வளப்படுத்தல், ஆரம்பக்கல்வி தரத்தை உயர்த்துதல், கற்பித்தல் தரத்தை மேம்படுத்தல், உயர்த்துதல், தரமேம்பாட்டை தீர்மானிக்கும் நிர்வாகத்தை வளர்த்தல், மதிப்பீட்டில் மாற்றங்களை கொண்டு வருதல், கல்வி வளங்களை விரிவாக்குதல் முதலானவை இடம் பெறும்" (ஜெயராசா,2006) இக்கருத்தானது வளங்களின் முக்கியத்துவத்தையும் தரமான உள்ளீடுகளின் முன்னேற்றத்தையும் ஆய்வாளர் உணர வழிகாட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கம் உலக வங்கியின் உதவியுடன் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக தரமான உள்ளீடுகளை கொள்வனவு செய்யும் உரிமையை பாடசாலைகளுக்கு வழங்கியது ( GEP – II ) தர உள்ளீட்டுக் கொள்வனவு நியாயமான முறையில் கல்வி வளங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தரமான உள்ளீடுகளை பாடசாலைகளில் பன்முகப்படுத்தி தேவையான நேரத்தில் தேவையான கல்வி வளங்களை பாடசாலைக்கு கிடைக்கச் செய்யும் விதமாகவே இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. (ஜயசிங்க,2000, ப.1).

தரமான உள்ளீடுகள் யாவும் தரமானதாகவும், நியாயமானதாகவும், பாகுபாடற்ற முறையிலும் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் நோக்கில் நிதியை ஒதுக்கீடு செய்யும் செயற்பாடுகள் நிதி ஆணைக்குழுவிடம் (FINANCE COMMISSION) ஒப்படைக்கப்பட்டன. இதனடிப்படையில் நிதி ஆணைக்குழுவானது நியமம்சார் அலகு விலை வளப்பகிர்வு பொறிநுட்பத்தை (NBUCRAM) முன்வைத்து அதனூடாக நியாயமான முறையிலும் வளப்பகிர்வில் ஏற்றத்தாழ்வற்ற முறையிலும் நிதியை ஒதுக்கீடு செய்வதை உறுதிப்படுத்திச் செயற்படுகின்றது.

## 9. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு ஓர் அளவைநிலை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. எண் பெறுமான அடிப்படையில் தகவல்கள் தரவுகளாக்கப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. வினாக்கொத்துக்கள், அவதானிப்புப்பத்திரம், நேர்காணல் படிவங்கள் என்பன தகவல் திரட்டும் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பங்குபற்றுநர்களாக அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்போர் இடம் பெறுகின்றனர். ஆய்வாளரால் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுப் பிரதேசமானது ஆய்வின் தேவையின் நிமித்தம் வரையறுக்கப்படுவது அவசியமானதாகும். இலங்கையின் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் ஐந்து வலயங்களுள் ஒன்றாக வலிகாமம் கல்வி வலயம் உள்ளது. இது நான்கு கோட்டங்களையும் சேர்த்து 138 பாடசாலைகளை உள்ளடக்கியுள்ளது.

அட்டவணை 1: கோட்டங்களும் பாடசாலை எண்ணிக்கையும் (2014)

| கோட்டம் | பாடசாலை எண்ணிக்கை | பாடசாலை வகை | | | |
|---|---|---|---|---|---|
| | | 1AB | 1C | Type II | Type III |
| உடுவில் | 31 | 3 | 3 | 10 | 15 |
| சங்கானை | 34 | 3 | 4 | 5 | 22 |
| சண்டிலிப்பாய் | 39 | 5 | 5 | 9 | 20 |
| தெல்லிப்பழை | 34 | 5 | 3 | 10 | 16 |

மூலம்:- திட்டமிடல் பிரிவு - வலிகாமம் கல்வி வலயம் - 2014

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட தெல்லிப்பழைக் கோட்டமானது 34 பாடசாலைகளைக் கொண்டது. இதில் 6 பாடசாலைகள் இடம்பெயர்ந்த நிலையில் இயங்கி வருகின்றன. தெல்லிப்பழைக் கோட்டத்தின் 11 பாடசாலைகள், 50ஆசிரியர்கள், 10அதிபர்கள், 100மாணவர்கள் குடித்தொகையினராகக் கொள்ளப்பட்டுள்ளனர். இங்கு எளிய படைகொண்ட எழுமாற்று முறை அடிப்படையிலேயே மாதிரி எடுப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

அட்டவணை 2: மாதிரித் தெரிவுப்பாடசாலைகள்

| பாடசாலை வகை | பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை | மாதிரி |
|---|---|---|
| 1 AB | 05 | 02 |
| 1 C | 03 | 01 |
| Type II | 10 | 03 |
| Type III | 16 | 05 |
| Total | 34 | 11 |

ஆய்வாளர் தனது ஆய்வுக்குப் பொருத்தமான முறையைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலையில் அளவைநிலை ஆய்வு முறை பொருத்தமெனத் தேர்ந்தெடுத்துள்ளார். (Survey Research Method) அதிபர், ஆசிரியர். மாணவர் ஆகிய பங்குபற்றுநர்களிடம் வினாக்கொத்து மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வினாக்கொத்தின் ஆரம்பத் தகவல்கள் பொதுவான தகவல்கள் திரட்டும் வகையில் அமைந்துள்ளன. வினாக்கொத்தின் உள்ளடக்கத்திலே அதிபர்களிற்குப் பொருத்தமான வினாக்கள் தனியாகவும், ஆசிரியர்களிற்குப் பொருத்தமான வினாக்கள் தனியாகவும், மாணவர்களுக்குப் பொருத்தமான வினாக்கள் தனியாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பாடசாலையின் தர உள்ளீடு தொடர்பான விடயங்களை ஆய்வாளர் பல்வேறு சந்தர்ப்பங்களிலும், வகுப்பறைத் தரிசிப்புக்களின் போதும் அவதானித்துள்ளார். வகுப்பறைப் பிரயோகங்களில் கற்பித்தல் சாதனங்கள்

பயன்படுத்தப்பட்டுள்ளதா? அவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளதா? Audio,video Room பயன்பாட்டில் உள்ளதா? போன்ற பல விடயங்கள் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டன. பாடசாலைகளில் தரஉள்ளீடு தொடர்பான பதினொரு கோவைகளும் காணப்படுகின்றதா? ஆவணங்கள், பதிவுகள் காணப்படுகின்றனவா? போன்ற பல விடயங்கள் வெளிப்படையாக அவதானிக்கப்பட்டன. குறித்த பாடசாலைகளின் பங்குபற்றுநர்கள் தாம் அவதானிக்கப்படுகின்றோம் என்பதை அவர்கள் அறியா வண்ணம் ஆய்வாளர் பல இடங்களில் அவதானிப்புக்களை மேற்கொண்டிருந்தார்.

கோட்டக்கல்வி அலுவலர், கோட்டக்கல்வி அலுவலக உதவியாளர், ஆசிரிய ஆலோசகர் போன்றோரிடம் பல்வேறு நிலைகளில் தர உள்ளீடு தொடர்பான தகவல்கள் திரட்டும் நேர்காணல் ஆய்வாளரால் நிகழ்த்தப்பட்டது. ஆய்வுடன் தொடர்புபட்டதாக கோட்டக்கல்வி அலுவலகம், வலயக்கல்வி அலுவலகம், மாகாணக்கல்வி அமைச்சு அறிக்கைகள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்ற பிரசுரிக்கப்பட்ட மூலங்களில் இருந்தும் ஆய்வுக்கான துணைத்தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

## 10. தரவுப் பகுப்பாய்வு முறைகள்

முதன்மை தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பல்வேறு நுட்பங்கள் ஆய்விலே பின்பற்றப்பட்டுள்ளன. வினாக்கொத்தில் காணப்படும் தரஉள்ளீடு தொடர்பான விடயங்கள் அட்டவணைகள், சலாகை வரைபுகள், வட்டவரைபுகள் போன்றன மூலம் விளக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பங்குபற்றுநர்களின் அபிப்பிராயங்கள் வினாக்கள் மூலம் எண்பெறுமான அளவீட்டில் பெறப்பட்டுள்ளன. இவர்களது கருத்துக்கள், தெரிவுகளை பொதுமையாக்கும் வகையில் சமூக விஞ்ஞானத்திற்கான புள்ளிவிபரவியல் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு பகுப்பாய்வு விபரிக்கப்பட்டுள்ளது. தரஉள்ளீடுகள் தொடர்பில் பெற்றுக்கொள்ளல், பயன்படுத்தல், போதுமானதன்மை, ஆசிரியர் மாணவர் செயற்பாட்டு நிலைமைகள், அடைவுமட்டங்கள் தொடர்பாக மூன்று பங்குபற்றுநர்கள் மூலமும் நோக்கப்பட்டுள்ளன. அதிபர், ஆசிரியர், மாணவர் தொடர்பில் தனித்தனியாகத் தரவுகள் பகுக்கப்பட்டு ஒப்பு நோக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3 : தெல்லிப்பழைக் கோட்டத்தின் ஆய்வுக்கென எடுத்துக் கொள்ளப்பட்ட பாடசாலைகளிற்கென 2013, 2014, 2015 ஆண்டுகளிற்கு ஒதுக்கப்பட்ட நிதி விடுவிப்பு தொடர்பான பகுப்பாய்வு

| No | School Name | CONSUMABLE & REPAIRS | | | HIGER ORDER PROCESS (T) | | HIGER ORDER PROCESS (S) | | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | PRI | SEC | SPEDU | PRI | SEC | PRI | SEC | |
| 1 | J/MAHAJANA COLLEGE | 82143 | 293143 | 0 | 8293 | 60500 | 26964 | 93014 | 564057 |
| 2 | J/ARUNODAYA COLLEGE | 82143 | 293143 | 0 | 8293 | 60500 | 26964 | 93014 | 564057 |
| 3 | J/MALLAKAM M.V | 0 | 198692 | 0 | 0 | 42808 | 0 | 63877 | 305377 |
| 4 | J/NADESWARA COLLEGE | 34500 | 63720 | 0 | 3483 | 17720 | 11325 | 21516 | 151764 |
| 5 | J/ALAVEDDY SATHANANDA | 34500 | 37800 | 0 | 3483 | 10200 | 11325 | 12516 | 109824 |
| 6 | J/KULAMANHAL R.C | 34500 | 63720 | 0 | 3483 | 17720 | 11325 | 21516 | 151764 |
| 7 | J/MALLAKAM VISALADSHI | 46000 | 0 | 0 | 4644 | 0 | 15100 | 0 | 65744 |
| 8 | J/NADESWARA KANISTA | 34500 | 0 | 0 | 3483 | 0 | 11325 | 0 | 49308 |
| 9 | J/THANTHAI SELVA | 46000 | 0 | 0 | 4644 | 0 | 15100 | 0 | 65744 |
| 10 | J/VAYAVILAN M.M.V | 0 | 256500 | 0 | 0 | 52938 | 0 | 81388 | 390826 |

மூலம்:- முகாமைத்துவப் பிரிவு வலிகாமம் கல்வி வலயம்

அட்டவணை 4: தரஉள்ளீட்டு நிதி ஒதுக்கீடு – 2014

| No | School Name | CONSUMABLE & REPAIRS | | | HIGER ORDER PROCESS (T) | | HIGER ORDER PROCESS (S) | | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | PRI | SEC | SP EDU | PRI | SEC | PRI | SEC | |
| 1 | J/MAHAJANA COLLEGE | 78531 | 227280 | 0 | 5678 | 60500 | 17429 | 58183 | 447601 |
| 2 | J/ARUNODAYA COLLEGE | 78531 | 227280 | 0 | 5678 | 60500 | 17429 | 58183 | 447601 |
| 3 | J/MALLAKAM M.V | 0 | 155880 | 0 | 0 | 42808 | 0 | 40812 | 239500 |
| 4 | J/NADESWARA COLLEGE | 0 | 34814 | 0 | 0 | 17720 | 0 | 15300 | 87334 |
| 5 | J/ALAVEDDYSATHANAN A | 33000 | 35081 | 0 | 2384 | 10200 | 7320 | 9000 | 96985 |
| 6 | J/KULAMANHAL R.C | 33000 | 54814 | 0 | 2384 | 17220 | 7320 | 15300 | 130038 |
| 7 | J/MALLAKAM VISALADSHI | 44000 | 0 | 0 | 3178 | 0 | 9760 | 0 | 56938 |
| 8 | J/NADESWARA KANISTA | 33000 | 0 | 0 | 2384 | 0 | 7320 | 0 | 42704 |
| 9 | J/THANTHAI SELVA | 44000 | 0 | 0 | 3178 | 0 | 9760 | 0 | 56938 |
| 10 | J/VAYAVILAN M.M.V | 0 | 198870 | 0 | 0 | 52938 | 0 | 50910 | 302718 |

த்துவப் பிரிவு வலிகாமம் கல்வி வலயம்)

அட்டவணை 5: தரஉள்ளீட்டு நிதி ஒதுக்கீடு – 2013

| No | School Name | CONSUMABLE & REPAIRS | | | HIGER ORDER PROCESS (T) | | HIGER ORDER PROCESS (S) | | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | PRI | SEC | SP EDU | PRI | SEC | PRI | SEC | |
| 1 | J/MAHAJANA COLLEGE | 86143 | 193153 | 15392 | 7832 | 64588 | 17607 | 47201 | 431916 |
| 2 | J/ARUNODAYA COLLEGE | 86143 | 193153 | 28068 | 7832 | 64588 | 17607 | 47201 | 444592 |
| 3 | J/MALLAKAM M.V | 0 | 13710 | 0 | 0 | 43641 | 0 | 31942 | 206293 |
| 4 | J/NADESWARA COLLEGE | 36180 | 54814 | 0 | 3290 | 18260 | 7395 | 13395 | 133334 |
| 5 | J/ALAVEDDY SATHANANDA | 36180 | 35081 | 0 | 3290 | 11610 | 7395 | 8573 | 102129 |
| 6 | J/KULAMANHAL R.C | 36180 | 54814 | 0 | 3290 | 18260 | 7395 | 13395 | 133334 |
| 7 | J/MALLAKAM VISALADSHI | 36180 | 0 | 0 | 3290 | 0 | 7395 | 0 | 46865 |
| 8 | J/NADESWARA KANISTA | 36180 | 0 | 0 | 3290 | 0 | 7395 | 0 | 46865 |
| 9 | J/THANTHAI SELVA | 48240 | 0 | 0 | 4386 | 0 | 9860 | 0 | 62486 |
| 10 | J/VAYAVILAN M.M.V | 0 | 267744 | 0 | 0 | 89414 | 0 | 65429 | 422587 |


(மூலம்:- முகாமைத்துவப் பிரிவு வலிகாமம் கல்வி வலயம்)

அட்டவணை 6: தரஉள்ளீட்டு நிதி ஒதுக்கீட்டுப் பகுப்பாய்வு

| No | School Name | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| 1 | J/MAHAJANA COLLEGE | 431916 | 447601 | 564057 |
| 2 | J/ARUNODAYA COLLEGE | 444592 | 447601 | 564057 |
| 3 | J/MALLAKAM M.V | 206293 | 239500 | 305377 |
| 4 | J/NADESWARA COLLEGE | 133334 | 87334 | 151764 |
| 5 | J/ALAVEDDY SATHANANDA | 102129 | 96985 | 109824 |
| 6 | J/KULAMANHAL R.C | 133334 | 130038 | 151764 |
| 7 | J/MALLAKAM VISALADSHI | 46865 | 56938 | 65744 |
| 8 | J/NADESWARA KANISTA | 46865 | 42704 | 49308 |
| 9 | J/THANTHAI SELVA | 62486 | 56938 | 65744 |
| 10 | J/VAYAVILAN M.M.V | 422587 | 302718 | 390826 |

மூலம்:- முகாமைத்துவப் பிரிவு வலிகாமம் கல்வி வலயம்

வரைபு - 1: 2013, 2014, 2015 ஆண்டுகளில் பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீடு




மேற்குறித்த பகுப்பாய்வானது 2013, 2014, 2015 ஆண்டுகாலப் பகுதிகளில் தர உள்ளீட்டுக்கென ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டினை விபரமாகக் காட்டுகின்றது. கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடானது பாடசாலை மாணவர் தொகைக்கு ஏற்ப மாறுபட்டதாக காணப்பட்டாலும், ஒதுக்கப்பட்ட நிதி விடுவிப்பானது அதிகரித்துக்கொண்டு செல்வதனை வெளிப்படுத்துகின்றது. சராசரியாக 1AB பாடசாலைகளுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரையிலும், Type II பாடசாலைகளுக்குச் சராசரியாக மூன்று இலட்சம் ரூபாய் வரையிலும், Type III பாடசாலைகளுக்குச் சராசரியாக ஒரு இலட்சம் ரூபாய் வரையிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## 10.1 மாணவர்களின் துலங்கல்களின் மூலமான கண்டறிதல்கள்

- வகுப்பறைகளில் ஆசிரியர்கள் அவ்வப்போது மட்டுமே கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துகின்றனர், சிலர் பயன்படுத்துவதே இல்லை.
- கற்றல் அடைவு மட்டத்தில் தர உள்ளீடும் செல்வாக்குச் செலுத்துகின்றது.
- பல மாணவர்கள் வகுப்பறைகளில் கற்பித்தல் சாதனங்களே இல்லை என வெளிப்படுத்தியுள்ளனர்.
- தரஉள்ளீட்டு நடைமுறைகள், நிதி ஒதுக்கீடுகள் பற்றி பெரும்பாலான மாணவர்களுக்குத் தெரியாது.
- கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தி கற்பிக்கும் பாடத்தில் கூடிய புள்ளிகள் பெறுவதாகத் தெரிவித்துள்ளனர்.

## 10.2 ஆசிரியர் துலங்கல்களின் மூலமான கண்டறிதல்கள்

- 36% ஆன ஆசிரியர்கள் தரஉள்ளீடுகளைப் பெறுவதில் தடைகளையும், கால தாமதங்களையும் எதிர்நோக்குகின்றனர்.
- 9%ஆன ஆசிரியர்கள் தேவைப்பட்டியலை உரிய நேரத்தில் ஒப்படைப்பதில்லை.
- 18% ஆனோர் பாடத்தேவை, தேர்ச்சிக்கு ஏற்ப தர உள்ளீடுகள் பாடசாலையில் சில நேரங்களில் வழங்கப்படுவதில்லை. என்று வெளிப்படுத்தியுள்ளனர்.
- தரமான உள்ளீட்டு நிதி தொடர்பான செலவு விபரங்கள் வெளிப்படையாகப் பேணப்படுவதில்லை என 16% ஆனோர் வெளிப்படுத்தியுள்ளனர்.
- நுகர் பொருளுக்கான ஒதுக்கீடு மூலதனப்பொருள் கொள்வனவுக்குப் பயன்படுத்தப்படுகிறது.
- வேலைச்சுமை தற்போது அதிகமாக காணப்படுகின்றது.
- தேவைப்பட்டியலைக் கொடுத்தும் கோரப்படும் பொருட்கள் கிடைப்பதில்லை.

## 10.3 அதிபர்களின் துலங்கல்கள் மூலமான கண்டறிதல்கள்

- ஆசிரியர்கள் தேவைப்பட்டியலை உரிய காலப்பகுதியில் ஒப்படைப்பதில்லை.
- சில ஆசிரியர்கள் தர உள்ளீடுகளை வகுப்பறையில் பயன்படுத்துவதில்லை.
- ஆசிரியர்களின் நேரான மனப்பாங்குகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன.
- சில ஆசிரியர்கள் மேற்பார்வைகளின் போது மட்டுமே தரஉள்ளீடுகளை பயன்படுத்துகின்றனர்,

## 11. ஆய்வு முடிவுகள்

பாடசாலைகளில் தரமான உள்ளீட்டுப் பயன்பாடு தொடர்பான நடைமுறைகளையும் பின்னணியையும் நோக்குகின்றபோது, சில ஆசிரியர்கள் தர உள்ளீடுகளைப் பயன்படுத்துவதைச் சுமையாகக் கருதுகின்றனர். நேர விரயம், மேலதிக நேரம் தேவைப்படுவதாகவும் குறிப்பிடுகின்றனர். மேற்பார்வையின்போது மட்டும் ஓரளவு பயன்படுத்தப்படுகின்றமையும் இடைநிலை வகுப்புக்களில் தர உள்ளீட்டுப் பயன்பாடு குறைவாக இருப்பதும் உயர்தர வகுப்புக்களில் பெரும்பாலும் பயன்படுத்துவதே இல்லை என்பதும் பங்குபற்றுநர்கள் மூலம் அறிய முடிந்துள்ளது. பாடசாலைக்குப் பாடசாலை தர உள்ளீட்டு நிதி ஒதுக்கீட்டில் பாகுபாடுகள் காணப்படுவதோடு, தர உள்ளீடுகள் வகுப்பறைக்குச் சீராகப் பகிர்ந்தளிக்கப்படுவதில்லை, தர உள்ளீடுகளைப் பயன்படுத்தல் தொடர்பான அதிபர், ஆசிரியர்களின் எதிர்மறை மனப்பாங்குகளும், தரஉள்ளீட்டு நிதி வெளிப்படையாகப் பேணப்படாமை, ஆசிரியர்களுக்கான வேலைப்பளு, நிதி முறைகளில் காணப்படும் மோசடிகள், கொள்வனவுக்குழு, மதிப்பீட்டுக்குழு என்பனவற்றின் வினைத்திறனற்ற செயற்பாடு, காலம் தாழ்த்திய கொள்வனவும் விநியோகம் என்பனவும் தர உள்ளீடுகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதிலுள்ள தடைகளாக அதிபர், ஆசிரியர்கள் இனங் காட்டியுள்ளனர்.

## 12.1 விதந்துரைகள்

மாணவர் மையக்கல்வியை வலியுறுத்தும் இன்றைய கலைத்திட்டம் தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடு சார்ந்த கலைத்திட்டமாகும். செயற்பாடு சார்ந்த கல்விக்கு தர உள்ளீடுகளைப் பயன்படுத்தல் என்பது முக்கியமான அம்சம் ஆகும். தர உள்ளீடுகளை வினைத்திறனாகப் பயன்படுத்தும்போதே கற்றல்-கற்பித்தல் தரம் விருத்தியடைகிறது, தர உள்ளீட்டின் வினைத்திறனான பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதை இவ்வாய்வு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இவற்றின் அடிப்படையில் பின்வரும் விதந்துரைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

- தரஉள்ளீட்டுப் பாவனையுடன் தொடர்புடைய அனைவரது மனப்பாங்கும் மேம்படுத்தப்பட வேண்டும்; தரஉள்ளீட்டுப் பாவனையின் முக்கியத்துவத்தினையும் அவசியத்தையும் அனைவரும் உணரச் செய்தல் வேண்டும்.
- தரஉள்ளீடுகளின் போதாமை, உரிய நேரத்தில் கிடைக்காமை என்பவற்றை நீக்க வலயம், அதிபர், ஆசிரியர் என்போர் தேவைகளை முன்கூட்டியே திட்டமிட்டு உரிய காலப்பகுதியில் நிதி ஒதுக்கீட்டினையும், கொள்வனவையும் மேற்கொள்ள வேண்டும்.
- தரஉள்ளீடு தொடர்பான மேற்பார்வை ஒழுங்குகள் திட்டமிட்ட ரீதியில் இயங்கு நிலையில் தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும்.
- தரஉள்ளீடு தொடர்பான நிதி ஒதுக்கீடுகள், கொள்வனவுகள் என்பன வெளிப்படையாகப் பேணப்படவும், மேற்பார்வை செய்யப்படவும் வேண்டும்.
- தரஉள்ளீடு தொடர்பான வலய, மாகாண, கோட்ட மட்ட கண்காணிப்புக்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.
- பொருத்தமான நேரத்தில் பொருத்தமான ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டும்.
- ஆசிரியர்களின் மனப்பாங்குகளை மாற்றி தரஉள்ளீட்டுப்பாவனை ஆர்வத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.
- உரிய ஒதுக்கீடுகளை உரிய தேர்ச்சிக்கு அமைய அப்பிரிவிற்கே செலவு செய்வதை உறுதிப்படுத்த வேண்டும்.
- நிதி முறைகளில் காணப்படும் மறைமுக மோசடிகளை வெளிக்கொணர்ந்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- கொள்வனவுக்குழு, மதிப்பீட்டுக்குழு அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டு வினைத்திறனான செயற்பாட்டிற்கு ஆவண செய்தல் வேண்டும்.
- தரஉள்ளீட்டுப் பாவனை தொடர்பான பாட, நேர ஒதுக்கீடுகள் கலைத்திட்டத்தின் மூலம் ஆசிரியருக்கு வழங்க வேண்டும்.

தர உள்ளீட்டுப் பயன்பாட்டில் காணப்படும் இவ்வாறான குறைபாடுகள் மாணவரின் கற்றலிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. தர உள்ளீட்டினை வினைத்திறனாகப் பயன்படுத்துவதனூடாக மாணவரின் கற்றலிலும் கல்வி அடைவிலும் மதிப்பீட்டிலும் பண்பு ரீதியான மாற்றத்தை பெற்றுக்கொள்ள முடியும். தர உள்ளீட்டுப் பயன்பாடு தொடர்பான நேர் மனப்பாங்கை அதிபர், ஆசிரியர்களிடம் ஏற்படுத்துவதன் மூலம் தர உள்ளீட்டின் வினைத்திறனான பயன்பாட்டை மேம்படுத்த முடியும்.